வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்,
ந,க.எண்.2925/ஆ1/2024 நாள்: 19.07.2024

பொருள் : பள்ளிக்கல்வி – வேலூர் மாவட்டம் – டாக்டர் இராதாகிருஷ்ணன் பிறந்த நாளான 05.09.2024 அன்று ஆசிரியர் தின விழா கொண்டாடுதல் – சிறந்த ஆசிரியர்களை தேர்ந்தெடுக்க ஏதுவாக EMIS இணையதளம் மூலம் ஆசிரியர்களின் விவரங்கள் பதிவேற்றம் செய்திட மென்பொருள் உருவாக்குதல் – மாநில நல்லாசிரியர் விருதுக்கு விண்ணப்பிக்கும் ஆசிரியர்கள் தங்கள் விவரங்களை EMIS இணைதளம் மூலம் பதிவேற்றம் செய்ய தெரிவித்தல் – சார்ந்து

பார்வை : 1.அரசாணை (1டி)எண்.220 பள்ளிக் கல்வி ( பொது–II) துறை நாள்.05.08.2022
2.தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.040011/ஐ/இ1/2024 நாள்.12.07.2024

-----

வேலூர் மாவட்டத்தில் உள்ள அரசு தொடக்க/ நடுநிலை / உயர்நிலை / மேல்நிலை/தனியார் பள்ளிகள்/ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள்/சமூக பாதுகாப்புத்துறை/ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறை மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் கீழ் இயங்கும் பள்ளிகளில் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதம் 5 ஆம் தேதி முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர்இராதாகிருஷ்ணன் பிறந்த நாளினை ஆசிரியர் தின விழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது. விருது பெறும் ஆசிரியர்களுக்கு ஆசிரியர் தின விழாவில் ரூ.10,000/– (ரூபாய் பத்து ஆயிரம் மட்டும்) ரொக்கப் பரிசும், ரூ.2,500/– மதிப்பிலான வெள்ளிப் பதக்கமும், பாராட்டுச் சான்றிதழ் மற்றும் பயணப்படியும் வழங்கப்பட்டு வருகிறது.

பார்வையில் காணும் அரசாணையில் டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது பெறும் ஆசிரியர்களை தேர்வு செய்திட கீழ்கண்டவாறு விருதுகள் நிர்ணயம், மாவட்ட குழு அமைத்தல், மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள், ஆகியவை தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | மாவட்டம் | தொடக்க/ நடுநிலை | உயர்நிலை/ மேல்நிலை | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | வேலூர் | 04 | 04 | 08 |

| | |
|---|---|
| மெட்ரிக் பள்ளிகள் (மாவட்டத்திற்கு 1 ஆசிரியர்) | = 01 |
| ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள் | = 02 |
| சமூக பாதுகாப்புத்துறை பள்ளிகள் | = 02 |
| மாற்றுத் திறனாளி ஆசிரியர்கள் | = 02 |

## வழிகாட்டு நெறிமுறைகள் (GUIDELINES)

1. அனைத்து வகை ஆசிரியர்களும் குறைந்தபட்ச 5 வருடங்கள் பணிபுரிந்திருக்க வேண்டும்.
2. மாநில பாடதிட்டத்தின் கீழ் செயல்படும் அரசு பள்ளிகள் ஆதிதிராவிட / பழங்குடியினர் நலத்துறை / பிற்பட்டோர் நலத்துறை / சமூக பாதுகாப்புத்துறை / நிதி உதவி பெறும் பள்ளிகள் / ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள் மற்றும் சுயநிதி மெட்ரிக் பள்ளிகள் ஆகிய மேலாண்மைகளின் கீழ் செயல்படும் தொடக்க / நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் அனைத்துவகை ஆசிரியர்களும் விருதிற்குத் தகுதியுடையவர்கள் ஆவார்கள்.
3. இவ்விருது வகுப்பறையில் ஆசிரியர்களுக்கு மட்டுமே கற்பித்தல் ஈடுபடும் வழங்கப்படும். அலுவலகங்களில் பணியில் நிர்வாகப் பணி மேற்கொள்ளும் ஆசிரியர்கள் விண்ணப்பிக்கக் கூடாது.
4. கல்வியாண்டில் செப்டம்பர் 30 ஆம் தேதிக்குள் முன் வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற்ற ஆசிரியர்களை பரிந்துரை செய்யக் கூடாது. ஆசிரியர்கள் கல்வியாண்டில் குறைந்தது 4 மாதங்கள் (செப்டம்பர் 30 ஆம் தேதி வரை – (in Regular Service) பணிபுரிந்தவர்களாக இருத்தல் வேண்டும். (மறு நியமன காலத்தை கணக்கில் எடுத்துக் கொள்ளக் கூடாது)
5. பரிந்துரைக்கப்படும் எவ்வித குற்றச்சாட்டிற்கும் ஒழுங்கு நடவடிக்கைக்கும் உட்படாதவராகவும்பொது வாழ்வில் தூய்மையானவராகவும், பொதுச் சேவைகளில் நாட்டம் கொண்டவராகவும் பள்ளி மாணவர்களின் இடைநிற்றலை குறைத்தல், பள்ளி மாணவர் சேர்க்கை, தேர்வில் தேர்ச்சி சதவீதத்தை உயர்த்துதல், கல்வித்தரத்தில் பின் தங்கிய மாணவர்களின் தரத்தை முன்னேற்றப்பாடுபடுபவராகவும் இருத்தல் வேண்டும்.
6. அசியலில் பங்குபெற்று அரசியல் கட்சிகளுடன் தொடர்புடைய ஆசிரியர்களின் பெயர்கள் கண்டிப்பாக பரிந்துரைக்கப்படக் கூடாது.
7. கல்வியினை வணிக ரீதியாக செயல்படும் ஆசிரியர்களையும் நடத்தை விதிகளுக்கு முரணாக இருக்கும் ஆசிரியர்களையும் இவ்விருதிற்கு தகுதயற்றவர்களாக கருதப்படல் வேண்டும்.
8. சசிறந்த முறையில் பணிபுரியும் தமிழாசிரியர்கள் மற்றும் சிறப்பாசிரியர்களான ஓவிய ஆசியர்கள்/உடற்கல்வி ஆசிரியர்கள் /கைத்தொழில் ஆசிரியர்கள் /இசை ஆசிரியர்கள்/மாற்றுத் திறனாளி ஆசிரியர்களில் தகுதியானவர்களையும் விருதிற்கு பரிந்துரைக்கும்போது கவனத்தில் கொள்ள வேண்டும்.

9. பரிந்துரைக்கப்படும் ஆசிரியர்களின் கருத்துருக்கள், பெயர் பட்டியலினை மாவட்ட தேர்வுக்குழு தலைவர் தமது சொந்த பொறுப்பில் வைத்துக் கொள்ள வேண்டும். தேர்வுக்குழு உறுப்பினர்களும் இது தொடர்பாக மந்தனம் காத்திடல் வேண்டும்.
10. டாக்டர் இராதாகிருஷ்ணன் விருத்திற்காக வரையறை செய்யப்பட்ட படிவத்தில் மட்டுமே ஆசிரியர்களின் இணைய வழியாக EMIS இணைய தளத்தில் பதிவேற்றம் செய்திடல் வேண்டும்.
11. ஆகஸ்ட் மாதம் 14 ஆம் தேதிக்குள் முதன்மைக் கல்வி அலுவலர்கள் தங்கள் மாவட்டத்திற்குட்பட்ட விருதுகளின் எண்ணிக்கை அடிப்படையில் பட்டியல் தயார் செய்து 1:2 என்ற விகிதத்தில் தேர்வு செய்து நல்லாசிரியர் விருதிற்கான ஆசிரியர்களின் கருத்துருக்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்திடல் வேண்டும்.
12. வருவாய் மாவட்டத்தில் உள்ள ஆசிரியர்களை தேர்வு செய்து பரிந்துரை செய்யப்படும்போது அனைத்து வகை ஆசிரியர்கள் மற்றும் அனைத்து பள்ளிகளையும் உள்ளடக்கியதாக உள்ளதை கவனத்தில் கொள்ள வேண்டும்.
13. மாநில அரசால் பாந்துரைக்கப்பட்டு தேசிய விருது பெற்ற எந்த ஆசிரியரையும் பரிந்துரை செய்தல் கூடாது.
14. எனவே எதிர் வரும் 05.09.2024 அன்று நடைபெறும் ஆசியர் தின விழாவில் சிறந்த ஆசிரியர்களை தேர்வு செய்திட ஏதுவாக ரமற்கண்ட அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி மாதிரி விண்ணப்ப படிவத்தினை அடிப்படையாகக் கொண்டு EMIS இணையதளம் மூலம் ஆசிரியர்கள் விவரங்கள் பதிவேற்றம் செய்திட புதிய மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது. பதிவேற்றம் செய்யப்படவேண்டிய விவரங்கள் இத்துடன் இணைப்பாக வழங்கப்பட்டுள்ளது.
15. எனவே அனைத்து அரசு தொடக்க / நடுநிலை / உயர்நிலை / மேல்நிலை / தனியார் பள்ளிகள் / ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள் / சமூக பாதுகாப்புத்துறை / ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறை மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் கீழ் இயங்கும் பள்ளிகளில் மாநில நல்லாசிரியர் விருதுக்கு விண்ணப்பிக்கும் ஆசிரியர்கள் தங்கள் விவரங்களை EMIS இணையதளம் மூலம் 24.07.2024க்குள் பதிவேற்றம் செய்திட மாவட்ட கல்வி அலுவலர் (இடைநிலைக் கல்வி, தொடக்க கல்வி, தனியார் பள்ளிகள்) அனைத்து பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு : மாதிரி விண்ணப்ப படிவம்

//ஒப்பம் //
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர் – 9.

பெறுநர்,
1. மாவட்டக்கல்வி அலுவலர், (இடைநிலைக் கல்வி) வேலூர்
2. மாவட்டக்கல்வி அலுவலர், (தொடக்க கல்வி) வேலூர்
3. மாவட்டக்கல்வி அலுவலர், (தனியார் பள்ளிகள்) வேலூர்
4.அனைத்து அரசு உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள்